5. i) பின்வரும் பயிர்கள் முதன்முதலில் பயிரிடப்பட்ட இடங்களையும் குறிப்பிடுக.

a) நெல்

b) கோதுமை

c) சோளம்

ii) ஆயுதங்களின் தன்மைக்கு அமைய கலாச்சார வளர்ச்சியின் மூன்று கட்டங்களையும் குறிப்பிடுக?

iii) புதிய கற்காலத்தில் பயிரிடப்பட்ட தானியங்கள் மூன்று தருக?

iv) ஹோமோசேபியன் இன மனிதனின் பிரிவுகள் 3 தருக?

(4x3=12 புள்ளிகள்)

6. i) ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட வீடுகளின் இயல்புகள் 2 தருக?

ii) புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் இயல்புகள் 3 தருக?

iii) மானிட பரிமாணம் என்றால் என்ன?

iv) பின்வருவன உருவாகிய காலங்களைக் குறிப்பிடுக?

a) இறந்தவர்களுக்கான மரணச்சடங்கை மேற்கொண்ட காலம்.

b) மனிதன் சமயவழிபாடுகளில் ஈடுபட்ட காலம்.

c) மனிதன் விவசாயம் செய்யப்பழகியமை

(4x3=12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -06 | வரலாறு | நேரம் : 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

❖ சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) மகாவம்சத்தை எழுதியவர்.
 1. மகாநாமதேரர்  2. அரிஸ்ரோட்டில்
 3. காசியப்பன்  4. குப்பிக்கல திஸ்ஸதேரர்

2) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
 1. 1775  2. 1840  3. 1990  4. 1890

3) மின்னேரியாக்குளத்தை கட்டுவித்த மன்னன்?
 1. மகாசேனன்  2. தாதுசேனன்  3. பராக்கிரமபாகு  4. வசபன்

4) பௌத்த வருடம் கணிக்கப்படுவது,
 1. புத்தர் இலங்கைக்கு வந்ததிலிருந்து
 2. புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்ததிலிருந்து
 3. புத்தபெருமான் இறப்பிலிருந்து
 4. புத்தபெருமான் பிறப்பிலிருந்து.

5) பூமி தோன்றிய தூசிப் படலம்.
 1. லாவா  2. நிகாரிகா  3. ஒபிபீனியா  4. மெமத்

6) கி.பி 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலங்கை வரலாற்றைக் கூறும் நூல்.
 1. மகாவம்சம்  2. தீபவம்சம்  3. சூளவம்சம்  4. போதி வம்சம்

7) பொலன்நறுவைக் கல்விகாரை யாரால் நிர்மாணிக்கப்பட்டது.
 1. 1ம் பராக்கிரமபாகு  2. 2ம் விஜயபாகு
 3. மகாசேனன்  4. வசபன்

8) வானரம் தன் நிலையில் இருந்து மனிதனது நிலையை அடைந்த பின் அழைக்கப்பட்ட விதம்.
 1. ஒபபீனியா  2. ஒஸ்ரலோபிதிகஸ்  3. நிகாரிகா  4. மெமத்

9) மனிதன் முதன்முதலில் நெருப்பை பயன்படுத்தியமைக்கான சான்று எங்கே கண்டுபிடிக்கப்பட்டது.
 1. கனடா  2. அனுராதபுரம்  3. இந்தியா  4. இஸ்ரேல்

10) முதன்முதலில் மனிதன் சமயவழிபாடுகளில் ஈடுபட்ட காலம்.
 1. இடைக்கற்காலம்  2. விவசாய காலம்
 3. புதிய கற்காலம்  4. பழைய கற்காலம்.



kalvi.lk

11) விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கான களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள் கண்டுபிடிக்கப்பட்ட நாடு.
1. இஸ்ரேல் 2. சீனா 3. இந்தியா 4. மாலைதீவு

12) தற்போது வாழும் மனித இனம்.
1. ஹோமோ இரெக்டஸ் 2. ஹோமோ நியண்டதாலன்சிஸ்
3. ஹோமோ ஹபிலிஸ் 4. ஹோமோ சேபியன்.

13) எரிமலைகள் வெடிக்கும் போது அதிலிருந்து வெளிவருவது,
1. நிகாரிகா 2. வாலா 3. நெபியூலா 4. ஒப்பீனியா

14) பூமியில் தாவரங்கள் தோன்றிய யுகம்.
1. சிலுரியன் யுகம் 2. பெலியொசொயிக் யுகம்.
3. ஹொலோசின் யுகம் 4. புதிய கற்காலம்

15) நாம் வாழும் கோள்.
1. செவ்வாய் 2. யுரேனஸ் 3. புதன் 4. பூமி

16) முதன் முதலில் நெருப்பை பயன்படுத்திய மனிதன்.
1. ஹோமோ கெபிலஸ் 2. நியண்டதாலன்சிஸ்
3. ஹோமோ இரெக்டஸ் 4. ஹோமா சேபியன்

17) முதன் முதலில் உயிரினங்கள் தோன்றியது.
1. நீர் 2. நிலம் 3. எரிமலை 4. வீடு

18) ஹோமோ ஹெபிலிஸ் என்பதன் அர்த்தம்.
1. சோம்பேறியான மனிதன் 2. ஆற்றலுடைய மனிதன்
3. நவீன மனிதன் 4. இயற்கை மனிதன்

19) மனிதனின் முக அமைவுகள், தோற்றங்கள் வேறுபடுவதற்கான பிரதான காரணம்.
1. பிறப்பு 2. சூழல் 3. பழக்கவழக்கம் 4. கலாச்சாரம்

20) பண்டமாற்று முறை ஆரம்பமான காலம்.
1. பழைய கற்காலம் 2. இடைக் கற்காலம்
3. புதிய கற்காலம் 4. சிலுரியன் யுகம்.



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

1. i) முதலாம் தவணைக்காக வரலாற்றுப் பாடத்தில் மேற்கொண்ட கணிப்பீடு ஒன்று தருக?
   ii) கணிப்பீட்டிற்காக தகவல்களை பெற்றுக் கொண்ட வழிகள் 3 தருக?
   iii) கணிப்பீட்டிற்காக நீர் பயன்படுத்திய பொருட்கள் 3 தருக?
   iv) கணிப்பீட்டின் மூலம் நீர் அடைந்த நன்மைகள் 3 தருக?

(4x3=12 புள்ளிகள்)

2. i) வரலாறு என்றால் என்ன?
   ii) வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் பயன்கள் 3 தருக?
   iii) வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களின் இரண்டு வகைகளையும் தருக?
   iv) தொல்பொருள் மூலாதாரங்கள் 3 தருக?

(4x3=12 புள்ளிகள்)

3. i) கீழைத்தேசத்தின் "தானியக்களஞ்சியம்" என அழைக்கப்பட்ட நாடு எது?
   ii) பின்வருவன எழுதப்பட்ட ' அமைக்கப்பட்ட காலப்பகுதியினைக் குறிப்பிடுக.
      a) தீபவம்சம்
      b) மகாசம்சம்
      c) பொலநறுவை கல்விகாரை
   iii) வரலாற்றுக் காலத்தை அளவிட பயன்படுத்திய முறைகள் 3 தருக?
   iv) சாலிவாகன சகாப்த முறை அறிமுகமானமைக்கான காரணத்தை குறிப்பிடுக.

(4x3=12 புள்ளிகள்)

4. i) பூமி தோன்றிய தூசிப் படலத்தின் பெயர் யாது?
   ii) ஒப்பீனியா என்ற உயிரினத்தின் அமைப்பின் தன்மைகள் 2 தருக?
   iii) ஏனைய விலங்குகளை விட மனிதனை முன்நிலைப்படுத்தும் செயல்கள் 3 தருக.
   iv) நெருப்பை கண்டுபிடித்தமையால் மனிதன் அடைந்த நன்மைகள் 2 தருக.

(4x3=12 புள்ளிகள்)



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page